# மல்லிகையே.. மல்லிகையே.. தூதாக போ... அரசின் பார்வைக்காக காத்திருக்கும் விவசாயிகள்

ADDED : மே 10, 2018 01:38 AM



மதுரை : மதுரை என்றதும் மல்லிகையும், அதன் மணமும்தான் முதலாவதாக நினைவுக்கு வரும். புவிசார் குறியீடும் மல்லிகைக்கு கிடைத்துள்ளது.

மாவட்டத்தில் சின்ன உலகாணி, பெரிய உலகாணி, மேல உப்பிலிகுண்டு, கல்லணை, கூடக்கோவில், பெரிய கூடக்கோவில், எலியார்பத்தி, கீழஉப்பிலிக்குண்டு, ஆவியூர், வலையன்குளம், சோளங்குருணி, கப்பலூர் உள்ளிட்ட இடங்களில் மல்லிகை பயிரிடப்படுகிறது.

செடிகளை நவ.,ல் நடவு செய்து, மார்ச்சில் அறுவடையை துவங்கி அக்.,ல் முடிப்பர். ஏப்., முதல் ஜூன் வரை விளைச்சல் அதிகமாக இருக்கும். பனி காலத்தில் பூக்கள் கருகி விடும். மாவட்டத்தில் 2 நாட்களுக்கு முன்பு பெய்த மழை, பூக்களுக்கு நல்ல ஊட்டத்தை அளித்துள்ளது. இதனால் 10 - 15 டன் வரை மதுரை பூ சந்தைக்கு விற்பனைக்கு வருகிறது. கிலோ 80 - 100 ரூபாய் வரை விற்கப்படுகிறது. போதிய விலை இல்லாததால் விவசாயிகள் தவிப்பிற்குள்ளாகி உள்ளனர்.

## உசிலம்பட்டிக்கு வரத்து அதிகம் :

மதுரை மாவட்டத்தில் மல்லிகை பெரும்பகுதி உசிலம்பட்டி தாலுகா பகுதியில் உற்பத்தியாகிறது. உசிலம்பட்டி பூ சந்தைக்கு 5 முதல் 7 டன்னுக்கும் மேல் மல்லிகை வரத்து உள்ளது. ஒரு ஏக்கரில் பயிர் செய்ய 25 ஆயிரம் முதல் 30 ஆயிரம் ரூபாய்

வைரயில் முதலீடு செய்ய வேண்டியுள்ளது. மூன்று மாத பராமரிப்புக்கு பின் பூக்கும் பருவத்திற்கு செடிகள் வரும். உரம், பூச்சி மருந்து, தண்ணீர் பாய்ச்சுதல் போன்ற செலவுகளுடன், பூக்கள் சேகரிக்க ஒரு கிலோ பூவிற்கு 40 - 50 ரூபாய் கூலி கொடுக்க வேண்டும். போக்குவரத்து செலவும் உண்டு.

அடக்க விலையாக கிலோவிற்கு 200 ரூபாய் வைர கிடைத்தால் மட்டுமே வியாபாரிகளுக்கு லாபம் ஏற்படும். சில நாட்களாக வரத்து அதிகரித்துள்ளதால் விலை சரிவு ஏற்பட்டுள்ளது. சுமார் 5 டன்னுக்கும் மேல் வாசைன திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு 100 ரூபாய்க்கும் குறைவான விலையில் வாங்கிச் செல்கின்றனர்.

உசிலம்பட்டியை மையமாக வைத்து குளிரூட்டப்பட்ட சேமிப்பு கிடங்கு அைமத்தால், விலை குறைவு காலங்களில் சிலநாட்கள் வைத்திருந்து விற்க வசதியாக இருக்கும். மேலும் வாசைன திரவிய தொழிற்சாலை உசிலம்பட்டி பகுதியில் துவக்கினால் கூடுதலாக பணம் கிடைக்க வாய்ப்பு உண்டாகும் என்கின்றனர் விவசாயிகள்.

**விவசாயிகள் கேட்பது என்ன?**

மல்லிகைக்கு அரசு பாதுகாப்பான விைலைய நிர்ணயிக்க வேண்டும். மல்லிகைக்கு கொள்முதல் நிலையம் வேண்டும். மதுரையில் அரசு சென்ட் தயாரிக்கும் தொழிற்சாலை அைமயும்போது, விலை இல்லாத நேரத்தில் விவசாயிகள் பூக்கைள விற்க முடியும். தண்ணீர் இல்லாத சமயத்தில், போர்வெல் மற்றும் கிணறு அைமக்க மானியம் வழங்க வேண்டும் என்பேத விவசாயிகளின் பிரதான கோரிக்கையாக உள்ளது.